RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt1936

# குறுந்தொகையில் விரவி வரும் அங்கதக் கோட்பாடு

பெ. ராஜேஸ்வரி [அ,*]

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை-641046, இந்தியா.

# The Aesthetic and Social Functions of Satire in Kuruntokai

P. Rajeswari [a, *]

[a] Department of Tamil, Bharathiar University, Coimbatore-641046, India

Received : 23-04-2019
Accepted : 14-05-2019

**ABSTRACT**

The richness and refinement of a language can be understood through the literary traditions that embody its expressive possibilities. The enduring significance of literary works is shaped by their subject matter, modes of narration, and aesthetic dimensions. In Kuruntokai, a major work of Sangam akam literature, satire (aṅkatam) functions as an important aesthetic and critical device, subtly complementing the emotional depth of its interior themes. Satirical expression is manifested through various rhetorical strategies, including the use of derogatory comparisons, ridicule, demeaning expressions, mockery, and denunciation. Rather than explicitly identifying individuals by name, certain poems employ indirect and generalized forms of satire to condemn moral transgressions and undesirable conduct, thereby extending individual criticism into a broader form of social commentary. This study examines the theoretical dimensions and literary functions of satire in Kuruntokai, with particular attention to its role in expressing moral criticism and social consciousness. The analysis considers the relationship between satirical techniques and the representation of ignorance, undesirable behaviour, and ethical decline. The study further relates these features to established theories of satire, particularly the Horatian, Juvenalian, and related traditions of satirical criticism, in order to understand how ridicule and denunciation can function as instruments of moral reflection and social critique. The findings suggest that satire in Kuruntokai operates not merely as an ornamental or humorous device but as a subtle mode of ethical discourse that intensifies the meaning of the poems and draws attention to social and moral concerns. Thus, the satirical dimensions embedded within Kuruntokai contribute significantly to its aesthetic sophistication, interpretive depth, and enduring influence within Tamil literary tradition.

**Keywords:** Kuruntokai, Tamil literary tradition, Akam literature, Sangam tradition.

## முன்னுரை

மொழியின் செம்மாந்த தன்மையை அதனூடே பரவிக்கிடக்கும் இலக்கிய வளத்தின் வாயிலாக அறியலாம். அத்தகைய இலக்கியங்களின் நிலைப்பும் குழைவும் அதன் நுவல்பொருள்,எடுத்துரைப்பு முறை, சுவை ஆகியவற்றைப் பொருத்தே அமைகின்றன.

அவ்வகையில் குறுந்தொகை நுவல்பொருள் வலிமையானும் நுட்பத்தானும் தமிழுலகில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தியுள்ளது. இக்குறுந்தொகையில் கூற்றிடை வைத்த குறிப்பாக விரவி வரும் அங்கதப் பரிமாணத்தை கோட்பாட்டு நோக்கில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அங்கதம்

அங்கதத்தை satire என்ற ஆங்கிலச் சொல்லால் குறிப்பிடுகின்றனர். satire என்பது satura என்ற இலத்தீன்மொழிச் சொல்லிலிருந்து வந்தது. கிரேக்கத்தில் அறுவடைக் காலத்தில் முதலில் பறிக்கப்படும் பழங்கள் நிரம்பிய கூடைக்கு santura lanx என்று வழங்கியுள்ளனர். மேலும், அறுவடைக்கால நாடகங்களில் அங்கதத்தின் சாயல்கள் இருந்துள்ளன. எனவே, இலத்தீன்மொழிச் சொல்லாக இருப்பினும் கிரேக்கத்தில் பயன்பாட்டில் இருந்ததை அறியமுடிகிறது. மேலும், அங்கதமானது காவியம், கவிதை, நாடகம் போன்ற தனி இலக்கிய வகைமை அல்ல அனைத்திலும் அங்கதச் சுவையானது விரவி இலக்கியத்தை தனித்தன்மைப்படுத்தும் அதற்குக் காரணம் பாவகையான கலப்பு அங்கதத்தில் இருக்கும் என்பதாகும்' தமிழ்ச்சூழலில் அங்கதம் என்பதற்கு வசை, பாவலர் தீச்சொல், அகத்தின் சினம் நகைச்சுவை. கேலிக்கூத்து நையாண்டி போன்ற பொருண்மைகள் வழங்கப்படுகின்றது.

## அங்கதம் பயின்று வரும் சொல்லாடல்கள்

அங்கதச் சுவையினைக் கையாளும் புலவர்கள் கீழ்க்கண்ட சொல்லாடல்களைக் கையாண்டு அதன்வழி வெளிப்படுத்துகின்றனர். அவையாவன

- Humour - நகைச்சுவை
- wit - சமத்காரம் (நகைச்சுவை நயமிகு பேச்சு)
- Satire - அங்கதம்
- Sarcasm - வடுசொல்
- Invective - பழிப்புரை
- Irany - வஞ்சப்புகழ்ச்சி
- Abuse - வசை
- Cynicism - வெறுப்பு மனப்பான்மை
- Exaggeration - இயற்கை மீறிய தாக்குதல்
- Burlesque - நையாண்டி
- Travesty - ஏளனம்
-

## அங்கதத்திற்கான வரையறைகள்

அயல்நாடுகளில் அங்கதம் பதினேழாம் நூற்றாண்டுகளில் இலக்கியங்களில் இடம்பெற்று தனித்துறையாக உருவெடுத்ததன் காரணமாக பல்வேறு அறிஞர்கள் கோட்பாட்டையும் வரையறைகளையும் உருவாக்கினர்.

தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்யும் பாட்டு அங்கதம் என்கிறார் சான்சன், குறைகளின் சீர்திருத்தமாக அங்கதம் விளங்குகிறது என்கிறார்கள் டிரைன், டிப்போ. தனிப்பட்ட மனிதனின் குறையையோ அல்லது சமூகத்தின் அல்லது ஒரு இயக்கத்தின் குறையை குறிப்பாகவோ வெளிப்படையாகவோ சுட்டிக்காட்டப் பயன்படுத்துவதே அங்கதம் - பிரிட்டானிக்காகலைக்களஞ்சியம்

அங்கதமானது தீமைகள், முட்டாள்தனம் திறமையின்மை ஆகியவற்றை தாக்குவதற்கும் அம்பலப்படுத்துவதற்கும் ஏளனம், கேலி, முரண் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது. அனைத்து நல்ல அங்கதங்களும் ஆக்கிரமிப்பு தாக்குதலுக்கான கூறாகவும் உலக மாற்றத்திற்கான பார்வையாகவும் திகழவேண்டும் -ஹாட்கார்ட்

அங்கதத்திற்கு வசையே நேர்பொருள் இதன் நோக்கம் சாடுவதன்றி திருத்துவது அல்ல - தமிழண்ணல் மேற்கண்ட வரையறைகளின்படி தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு அடிப்படையிலும் சமுதாய உணர்வு அடிப்படையிலும் தனிநபர், சமூகம், இயக்கம் ஆகியவற்றின் குறைகளை எள்ளற்கு ஆட்படுத்துவது அங்கதம் என்பது புலனாகிறது.

## அங்கதத்தின் வகைகள்

- எடுத்துரைப்பு - நேரடி, மறைபொருள்
- பொருண்மை - தனிநபர் அரசியல் சமயம், சமுதாயம்
- பரம்பரை - ஹொராசியஸ், ஜூவேனியல், மெனிப்பஸ்.

மேற்கண்ட எடுத்துரைப்பு, பொருண்மை ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஹொராசியன் ஜூவேனியல், மெனிப்பஸ் ஆகிய மூவரும் அங்கதத்தை கையாண்ட முறையே கோட்பாடுகள் உருவாகக் காரணமாயின இன்றைய இலக்கிய உலகில் இம்மூவரின் கோட்பாடுகளே வகைமைகளாக மாறி அங்கதவியலாளர்களால் கையாளப்படுகின்றன.

## ஹொரேசியன் அங்கதம்

ஹொரேசு என்பவர் ரோமன் எழுத்தாளர். இவர் கி.மு 64 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரின் அங்கதம் மிகவும் மென்மையானது. நாகரிகமானது. ரோம் மற்றும் கிரீக் ஆகிய நாடுகளில் இருந்த பழமையான மற்றும் தத்துவ ரீதியான மேலாதிக்க உணர்வுகளை அங்கதப்படுத்தி எழுதினார். மென்மையான புத்திசாலித்தனமான அங்கதத்தைக் கையாண்ட ஹொரேசின் அங்கதத்தின் மையத்தையே இவ்வங்கதக் கோட்பாடு வலியுறுத்துகிறது. நகையுணர்வைத் தூண்டும் மனிதனின் பொதுவான பிரச்சினைகளை மட்டும் அங்கதமாக்குவது இக்கோட்பாட்டின் நோக்கம்.

## ஜூவேனியலின் அங்கதம்

ஜூவேனல் என்பவர் ரோமன் அங்கத எழுத்தாளர். இவரின் அங்கதம் இறுமாப்பானது. வன்மையாகக் கண்டிக்கக் கூடியது. தலைவர்கள், நிறுவனங்கள் ஆகியோர் மீது ஏற்பட்ட கருத்து /வேறுபாட்டினை எடுத்துரைக்க அங்கத வடிவில் இலக்கியத்தைப் பயன்படுத்தினார். பொதுப்பிரச்சினை, அரசியல் ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்து அங்கதம் எழுதினார்.

சமூகத்தின் பிரச்சனைகளை அங்கதத்தின் வழியாகக் கூறி தனது வெறுப்பினைக் காட்டினார். கோபம் வெறுப்பு வேடிக்கை ஆகிய மெய்ப்பாடுகளை இவரின் அங்கதத்தில் காணலாம். ஜூவேனல் பாணியைப் பின்பற்றி அமைந்தது ஜூவேனியலின் அங்கதக் கோட்பாடு. ஜூவேனியலின் அங்கதத்தில் நகைச்சுவைக்கு சிறிதளவே இடம் கொடுக்கப்பட்டு அதிக கோபத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும். அதிகம் பிரச்சனைக்குட்பட்ட அரசியல் அங்கதங்கள் பெரும்பான்மை ஜூவேனலின் சாயலில் எழுதிய அங்கதங்களே என்று ஆணித்தரமாக கூற இயலும். ஜூவேனியல் அங்கதத்தின் முக்கிய நோக்கம் தனிமனித சமுதாய அரசியல் மாற்றங்களை உருவாக்குவது ஆகும்.

## மெனிப்பியன் அங்கதம்

மெனிப்பஸின் அங்கதப் படைப்புகள் இன்று கிடைக்கவில்லை. ஆனால் இவரின் எழுத்துகளைப் பின்பற்றி பல அங்கத எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர். லூசியன், மார்சல், டெரண்டியஸ்வாரோ போன்றோர் மெனிப்பியனைப் பின்பற்றி அங்கதம் எழுதியவர்கள் ஆவர். மேலும், இவரின் அங்கதத்தையும் சிலர் ஹொரேசியன் அங்கதம் என்றே அழைக்கின்றனர் இது அங்கதக் கருத்தின் கலப்பாக உள்ளதே மெனிப்பியன் அங்கதமே தவிர தனித்த முழுமையான அங்கதமாக இல்லை இவ்வங்கதத்திற்கு தனித்த வரையறை இல்லை மெனிப்பியன் அங்கதம் மிகவும் குழப்பமானது எனவே சமுதாயத்தில் பெருமளவு பயன்படுத்தப்படவில்லை.

இன்றைய காலக்கட்டத்தில் இலக்கியங்களிலும் ஊடகங்களிலும் வெளிப்படும் அங்கதங்கள் பெருமளவில் ஜீவேனியல் அங்கதக் கோட்பாட்டைத் தழுவியதாகவே அமைகின்றன.

## தமிழ்ச் சூழலில் அங்கதக் கோட்பாடு

உலக அளவில் பதினேழாம் நூற்றாண்டுகளில் கோட்பாடாக விரிவு பெற்ற அங்கதம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கோட்பாட்டளவில் வேரூன்றி இருந்துள்ளதை தொல்காப்பியர் குறிப்பிட்ட அங்கத இலக்கணத்தின் மூலம் புலப்படுகிறது. கோட்பாடு என்ற சொல்லாடல் இல்லையெனினும் பொருண்மை, வகைகள், பாவகை, அடியளவு ஆகியவற்றை உரைத்ததன்வழி அங்கதம் பெருமளவில் கோலோச்சியுள்ளதை அறியமுடிகின்றது. வாய்மொழி சார்ந்த இலக்கிய வகைமைகளில் ஒன்றாக அங்கதம் திகழ்ந்ததை

'பாட்டுரை நூலே வாய்மொழிப் பிசியே

அங்கதம் முதுசொல்........

என்ற நூற்பா வழியாகவும் இலக்கியத்தில் பயணப்பட்டதை,

'வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்

அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்'

என்ற தொல்காப்பிய நூற்பா புலப்படுத்துகிறது. இதன்வழி வாய்மொழி வழக்காறாகவும் இலக்கியத்தின் வகைமையாகவும் அங்கதம் தனது செல்வாக்கை நிலைநிறுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. இக்கூற்றின் மூலம் அங்கதமானது சாடுதல் என்ற வசைப்பொருளிலும் நகை என்ற எள்ளல் பொருளிலும் வரும் என்பது புலனாகிறது. மேலும், இவ்வங்கதமானது

வெளிப்படையாக வரும் செம்பொருள் அங்கதம், மறைபொருளாக வரும் பழிகரப்பு அங்கதம் என்று இருவகைப்படும் என்பதை தொல்காப்பியர்,

"அங்கதந் தானே அரில்தபத் தெரியின்

செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே"

என்று தெரிவு செய்கிறார். இவற்றை ஆங்கில இலக்கியச் சூழலில்

1.நேரடி அங்கதம் (direct satire)

2. மறைமுக அங்கதம் (indirect satire)

என்று வகைப்படுத்துகின்றனர்.

இத்தகைய அங்கதச் செய்யுளின் யாப்பு வடிவத்தைக் கூற வந்த தொல்காப்பியர் - கைக்கிளை,பரிபாடல் போன்று அங்கதமும் வெண்பா யாப்பினைத் தழுவி வரும் என்றும் வெண்பாவின் அடிவரையறையே அங்கதத்திற்கும் பொருந்தும் என்றும் குறிப்பிடுவதை,

"அங்கதப் பாட்டளவு அவற்றொடு ஒக்கும்"

என்ற கூற்றால் அறியலாம். மேற்கண்ட பொருண்மை, வகை, யாப்பு, அடி வரையறை ஆகியவற்றால் இலக்கியத்திலும் பேச்சு வழக்கிலும் அங்கதப் பயன்பாடு பெருமளவில் இருந்துள்ளது என்பதையும் அதன்காரணமாகவே இத்தகைய கோட்பாடு உருவாகி இலக்கணக் கூறுகளை வரையறுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் முடிவுக்கு வரலாம்.

## உரையாசிரியர்களும் அங்கதக் கோட்பாடும்

அங்கதம் பற்றிய தொல்காப்பியர் கூற்று ஆழமானது உரையாசியர்கள் மூலமாகவே அங்கதம் குறித்த ஆழமான தெளிவு கிடைக்கப்பெற்றது.

| இளம்பூரணர் | பேராசிரியர் | நச்சினார்க்கினியர் |
|---|---|---|
| அங்கதம் செம்பொருள் கரந்தது என இருவகைப்படும். | அங்கதம் செம்பொருள் கரந்தது என இருவகைப்படும். | அங்கதம் செம்பொருள் கரந்தது என இருவகைப்படும். |
| வசை, நகை ஆகிய இரு பொருண்மையை மையமமாகக் கொண்டு வரும் | வசை, நகை ஆகிய இரு பொருண்மையை மையமமாகக் கொண்டு வரும். வஞ்சப் புகழ்ச்சி மற்றும் சபித்தல் சார்ந்து வரும் மந்திரம் அங்கதம் ஆகும் | வசை, நகை ஆகிய இரு பொருண்மையை மையமமாகக் கொண்டு வரும் |
| வெண்பாவான் ஆக்கம் பெறும் | வெண்பாவான் ஆக்கம் பெறும் | வெண்பா மட்டுமின்றி பிற்பாக்களாலும் ஆக்கம் பெறும். |

பிற்காலத்தில் பாடப்பட்ட தனிப்பாடல்களில் அங்கதங்கள் அனைத்து பாக்களிலும் இடம்பெற்றமைக்கு நச்சரின் அங்கதக் கோட்பாடு முன்னோடியாக அமைந்ததுள்ளது. உரையாசிரியர்களின் அங்கதக் கோட்பாடு அங்கதத்தை புரிதலுக்கு ஆட்படுத்துவதோடு காலமாற்றத்தால் அங்கதத்தில் ஏற்பட்ட வளர்ச்சியையும் பதிவு செய்கிறது.

## குறுந்தொகையில் அங்கதம்

அக இருநூற்றைவர்களால் உருவாக்கப்பட்டு இலக்கணத்தில் வரும் ஒழுகலாறுகளை எடுத்தியம்பும் வகையில் அக இலக்கிய மாந்தர்களை பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டு பாடப்பட்ட அகவிலக்கணத் தொகை நூலான குறுந்தொகை நானூறு பாடல்களைக் கொண்டது. பன்னிரு பெண்பாற் புலவர்களால் பாட்ப்பட்ட 51 பாடல்களையும் உள்ளடக்கி உள்ளது. உள்ளத்து உணர்வுகளான அகக்கூறுகளை, சுட்டி ஒருவர் பெயர் சொல்லாது, சிறு சிறு நாடக அமைப்பில் கற்பு சார்ந்தும் களவும் சார்ந்தும் பாக்களை இயற்றியுள்ளனர். எதார்த்தமான புரிதலுக்கு வாசகனை ஆட்படுத்தும் இயல்புடைத்து, குறுந்தொகையில் கருப்பொருளைக் காட்டிலும் உரிப்பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கருப்பொருளுக்கு முக்கியத்துவம், கொடுத்து புனையப்பட்ட பாடல்கள் புறத்திணையை மிகுதியாக எடுத்தாளுவதைக் காணமுடிகின்றது. மேலும் உள்ளுறை, இறைச்சி, முன்னம் போன்ற நுணுக்கமிகு உத்திகள் பயன்படுத்தப்பட்டடிருப்பது பாடல்களின் பொருளை மேன்மைபெறச் செய்கின்றன. அங்கத் உத்தியானது குறுந்தொகையில் கூற்றிடை வைத்த குறிப்பாக இடம்பெற்றிருப்பினும் இடம்பெற்ற குறிப்புச் சொற்களும் தொடர்களும் வலிமையான அங்கதச்சுவையை விளைவிக்கின்றன. இத்தகைய குறுந்தொகையில் விரவிவரும் அக்கோட்பாட்டை செம்பொருள் நோக்கிலும் பழிகரப்பு நோக்கிலும் ஆராய்ந்து கீழ்க்கண்ட பிரிவுகளில் உள்ளடக்கலாம்.

- இழியுவமையும் இகழ்ச்சிப் பொருளும்.
- குறுந்தொகையில் வசைபொருள் அங்கதம்.
- அலரால் எழுந்த அங்கதமும் வெளிப்படும் கோட்பாடும்.
- குறுந்தொகையில் சபித்தல் அங்கதம்.

மேற்கண்ட பொருண்மைகளின் வழி குறுந்தொகையின் அங்கதக் கையாளுமை நுவல் பொருளைச் சுவையுணர்வோடு எடுத்தியம்புவதுடன் எடுத்துரைப்பின் நோக்கமும் வெற்றியடைவதை அறிய முடிகின்றது.

## இழியுவமையும் இகழ்ச்சிப் பொருளும்

சங்க இலக்கியத்தில் அகப்பாடல்களின் சுவையை மெருகேற்றும் நோக்கில் பயன்படுத்தப்பட்ட உள்ளுறை, இறைச்சி, முன்னம், ஆகிய உத்திகள் அங்கதம், குறியீடு, படிமம் போன்ற எதிர்கால நவீன உத்திகளுக்கு வழிவகுத்தன. சம்பந்தப்பட்டவர்களை மதிப்பிழக்கச் செய்யும் நோக்கில் பழிகரப்பாக எடுத்துரைக்கையில் உள்ளுறையில் இழியுவமைகளையும் செம்பொருளர்க எடுத்துரைக்கையில் நேரடியான இகழ்தல் சொற்கள் மற்றும் சொற்றொடர்கள். பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. கன்றினை ஈன்ற எருமையானது தன் கன்றினை விட்டு அகலாமல் அருகில் உள்ள பயிர்களை மேயும் அதுபோல தலைவன் தலைவியுடனும் இருந்து பரத்தை வீட்டை நாடுகிறான் என்பதை,

“இருமருப்பு எருமை ஈன்றணிக் காரான்

உழவன் யாத்த குழவியின் அகலாது

பாஅல் பைம்பயிர் ஆரும் ஊரன்"

என்று சுட்டுவதன்வழி தலைவனின் ஒழுக்கக்கேட்டை சுட்டிக்காட்ட எருமை என்ற இழியுவமையைப் பயன்படுத்தியமை அங்கதச் சுவையை விளைவிக்கிறது. அறிவின்மையால் விளைந்த இந்த பரத்தைமையைக் கடிந்துரைப்பது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்யும் பாட்டு அங்கதம்" என்ற சான்சனின் கோட்பாட்டைப் பிரதிபலிக்கிறது. தலைவி தன்னை புறங்கூறினாள் என்று கேள்விப்பட்ட காமக்கிழத்தி அன்னாரின் உறவினர் கேட்ப 'தலைவன் தன் இல்லத்தில் தன்னைப் புகழ்ந்தும் தலைவியின் இல்லத்தில் சொன்னதைச் செய்யும் கண்ணாடி போன்று அடிமையாகவும் செயல்படுகின்றான் என்று இகழ்வதை,

"எம்மில் பெருமொழி கூறி தம்மில்

கையும் காலும் தூக்கத் தூக்கும்

ஆடிப் பாவை போல"

என்ற பாடல் புலப்படுத்துகிறது. இங்கு தொல்காப்பியர் குறிப்பிடும் பழிகரப்பு அங்கதம், கூற்றிடை வைத்த குறிப்பாக கையாளப்பட்டு அடிமை வேலை செய்கிறான் என்ற பொருளை வெளிப்படுத்துகிறது. இது காமக்கிழத்தியின் தனிப்பட்ட வெறுப்பினால் எழுந்த அங்கதமாகும். ஜெயமோகனனின் அங்கத வரையறைக்கேற்ப புனிதமாக கருதும் தலைவனை மதிப்பிழக்கச் செய்வதன் மூலம் தலைவிக்கு எரிச்சலூட்டும் நோக்கில் எழுந்தது ஆகும் வாயில்புக்க விளைந்த பாணன் தலைவனைப் பொய்யாக அன்பினன் என்று புகழ்ந்ததைக் கண்ட தலைவி "பாணனின் வாயளவில் தான் தலைவன் அன்பன், செயலில் இல்லை என்பதை ஏளனக்கூற்றில்,

"யாணர் ஊரன் பாணன் வாயே!"

என்று எள்ளி நகையாடுகிறாள். இத்தகைய நையாண்டி சொற்றொடரான "வாயில் வடை சுடுகிறான்" என்பது இன்றளவும் பேச்சு வழக்கில் உள்ளதைக் காணமுடிகின்றது. இத்தகைய அனுபவம் மூலம் எழுதப்படும் அங்கத வடிவப் பழமொழிகளை aphorism என்ற சொல்லால் குறிப்பிடுவதை ஹாட்கார்ட் சுட்டிக்காட்டுகிறார்" மேலும் இவ்வங்கதமானது அறம் சார்ந்து நகைச்சுவையை மையப்படுத்தி மென்மையான வகையில் வரையறுத்த ஹொரேசியன் அங்கதக் கோட்பாட்டிற்கு வலுசேர்ப்பனவாயுள்ளன.

## குறுந்தொகையில் வசை பொருள் அங்கதம்

தொல்காப்பியர் குறிப்பிடும் அங்கதக் கோட்பாட்டில் முதன்மையானது வசை பொருள் அங்கதம், இவ்வகை அங்கதம் பெரும்பான்மையாக செம்பொருளில் நேரடி வசையாகவே வரும். குறுந்தொகையிலும் வாயிலாக வந்த பாணன், தலைவனை பொய்யாகப் புகழ்ந்ததை ஏற்க முடியாத தலைவி தலைவனின் ஊரைச் சார்ந்த பாணன் பொய்யன் எனவும் அவனால் அந்த ஊரில் உள்ள பாணர்குலமே தனித்திருக்கும் மகளிர்க்கு கள்வர் போலத் தெரிகிறது எனவும் வசைபாடுவதை

"ஒருநின் பாணன் பொய்யன் ஆக

உள்ள பாணர் எல்லாம்

கள்வர் போல்வர்நீ அகன்றி சினோர்க்கே"

என்ற ஓரம்போகியாரின் வரிகளால் புலப்படுத்துகிறது. இங்கு கள்வர், பொய்யன் ஆகிய வசைச் சொற்கள் பாடலின் மையப்பொருளுக்கு வலுசேர்த்ததுடன் கடுமையான வகையில் வசைச் சொற்களைப் பயன்படுத்தி எழுதிய ஜூவேனியலின் அங்கதக் கோட்பாட்டை எடுத்தாளுகிறது.

## அலரால் எழுந்த அங்கதமும் வெளிப்படும் கோட்பாடும்

அலர் என்பது ஊராரின் பழிச்சொல்லைக் குறிக்கும். தலைவனின் களவு சந்திப்பும், வரைவு நீட்டித்தலும், பரத்தையர் பிரிவும் தலைவி மீதான அவர் எழக் காரணமாகி மன உளைச்சலை ஏற்படுத்தும். எனவே அலர் எழக் காரணமான தலைவனையும் அலர் தூற்றும் மக்களையும் வஞ்சிக்கும் பொருட்டு தலைவி அங்கதத்தைப் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. தலைவனின் பிரிவால் வாடும் தலைவி உலகமே தூங்கும் இந்த யாமத்தில் தான் மட்டும் தூக்கமின்றி தவிக்கும் சூழலில் அலர்தூற்றும் அறிவின்மையையுடைய மாக்களும் எவ்வித சலனமுழின்றி உறங்குவதைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"நள்ளென்றன்றே யாமம் சொல் லவிந்து

இனிது அடங்கினரே மாக்கள்"

ஈண்டு மாக்கள் என்ற சொல் அறிவிலிகளாக செயல்பட்டு அலர்தூற்றும் மக்களை வசைபாடுவதாக அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. நேரடியாக வசை வெளிப்பட்டு நிற்றலின் தொல்காப்பியர் சுட்டும் செம்பொருள் அங்கதமானது களவு ஒழுக்கம் மேற்கொள்ளும் தலைவனிடத்து அலர் உரைத்து வரைவு மேற்கொள்ள விழைந்த தலைவி தனது வள்ளைப்பாட்டில் தலைவனின் புகழை எடுத்தியம்புவதைக் கண்ட ஊரார் அலர் தூற்றியதால் சினம் கொண்ட தலைவி அறிவு இல்லாத ஊர் எனவும் தனது செயலால் ஊரார்க்கு என்ன அழிவு வந்தது எனவும் சினத்தை உமிழ்வதை,

"ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப

அழிவது எவன்கொல் இப்பேதை ஊர்க்கே"

என்ற பரணர் பாடல்வழி அறிய முடிகின்றது, வரைவு மேற்கொள்ளத் தூண்டுவதுடன் தலைவியின் சினத்தால் வெளிப்பட்ட அறிவிலி ஊர், அழிவு நேர்தல் போன்ற சொற்கள் அகத்தின் சினமான அங்கதத்தை விளைவிக்கிறது. இது கடுமையான சொற்களால் அங்கதத்தை வெளிப்படுத்திய ஜூவேனியலின் அங்கதக் கோட்பாட்டை ஒத்திருப்பதைக் காணமுடிகிறது.

## குறுந்தொகையில் சபித்தல் அங்கதம்

சபித்தலும் அங்தத்தின்பாற்பட்டது என்ற பேராசிரியரின் அங்கதக் கோட்பாடு குறுந்தெகையின் சிற்சில இடங்களில் கையாளப்பட்டுள்ளன. தனது மனதின் சினத்தை சபித்தல் மூலம் தனித்துக்கொள்ள இவ்வகை அங்கதத்தைக் கையாண்டுள்ளனர். பரத்தையைப் பிரிந்த தலைவனைக் கண்டதும் ஆசை கொண்ட அற்ப நெஞ்சத்தை தலைவி, 'அதியன் நெடுமான் அஞ்சியின் போர்க்களத்தில் உள்ள இரவையுடைய ஊரில் உள்ளார் போல நீயும் தூங்காது கெட்டு ஒழிக என்று சீர்தூக்கிப் பார்க்கும் அறிவை இழந்த தனது நெஞ்சிற்கு சாபம் விடுவதை,

“கடும் பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி

கொன்முனை இரவுஊர் போல

சில ஆகுக நீ துஞ்சும் நாளே”

என்ற வரிகளால் அறியமுடிகின்றது. இதனை தோழி கூற்று என்பாரும் உண்டு. அவ்வாறு இருப்பினும் சபித்தல் சொல்லானது அங்கதத்தையே விளைவிக்கின்றது. தலைவனோடு பாயல் கொண்டிருந்த தலைவி உறக்கத்தை கூவிக் கெடுத்த சேவலை காட்டுப் பூனையின் குட்டிக்கு இரையாவாய் என்று சபிப்பதை

"தொகுசெந் நெற்றிக் கணம்கொள் சேவல்

நள்ளிருள் யாமத்து இல்எலி பார்க்கும்

பிள்ளை வெருகிற்கு அல்குஇரை ஆகி”

என்ற வரிகள் உணர்த்துகின்றது. இத்தகைய சபித்தல் போக்கு மனத்திலுள்ள சினத்தின் காரணமாக எழுவதால் பேராசிரியர் குறிப்பிடும் சபித்தல் சார்ந்த அங்கதக் கோட்பாட்டோடு பொருந்திநிற்கிறது.

## குறுந்தொகை அங்கதமும் இன்றைய அங்கதமும்

குறுந்தொகையில் வாழ்வியல் சார்ந்த ஒழுக்கக் கேட்டையும் ஊராரின் புறங்கூறல் தன்மையையும் பாணனின் பொய்மையையும் கண்டிக்க எழுந்த வசைபொருள் அங்கதம், பிற்கால இலக்கியங்களில் நாட்டளவில், அரசியலில், சமுதாயத்தில், தனிமனிதனிடத்தில் காணப்பட்ட குறைகளைச் சுட்டிக்காட்டவும்எதிர்க்கவும் தூண்டுகோலாய் அமைந்தன. வசைக்கூத்து என்பது சங்க காலத்தில் அங்கதப்பாணியில் நடைபெற்ற நாடக வகை என்றும் இதற்கான கூறுகள் கலித்தொகையில் உள்ளதாகவும் கிரேக்கத்தின் அறுவடைக்கால திருவிழா நாடகங்களில் அங்கதத்தின் சாயல் இருந்துள்ளதாகவும் பழமையான அங்கதவியலார் ஜீவெனல் முதன்முதலாக நாடகத்தில் அங்கதத்தைப் பயன்படுத்தினார் எனவும் குறிப்பிடுவது முந்தைய காலக்கட்டத்தில் கூத்து என்று சொல்லப்பட்ட நாடகத்தில் அங்கதங்கள் வேரூன்றியிருந்ததையும் அதன் தொடர்ச்சியாக இன்று திரைப்படங்கள் வரை எதிரொலிப்பதையும் உறுதிப்படுத்துகின்றன செய்தித்தாள், முகநூல் புலனம், படவரி, கீச்சகம், பற்றியம், ஆகியவற்றில் அங்கதம் குறுங்கவிதைகளாகவும் ஒப்பு விகடமாகவும் கேலிச்சித்திரங்களாகவும் போன்மிகளாகவும் வடிவம் பெற்று தனிமனிதன். சமுதாயம், அரசியல் சார்ந்த குற்றங்களை கடிந்துரைத்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தல் ஆகியவற்றிற்கு குறுமை அவசியம் என்பதை குறுந்தொகை வாயிலாக அறியமுடிகின்றது. மேலும் மெத்தப் படித்தவர்கள் மட்டுமின்றி சாதாரண மக்களுக்கும் சமுதாய அரசியல் பண்பாடு குறித்த விழிப்புணர்வு ஏற்பட இக்குறுமை பயன்பாடே காரணம் எனினும் மிகையன்று.

## முடிவுரை

குறுந்தொகையின் அகக்கருத்தின் ஆழத்திற்கு நகையாகவும் வசையாகவும் வரும் அங்கதச்சுவை அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இழியுவமையைப் பயன்படுத்தல் வசைதல், அஃறிணைச் சொற்களைப் பயன்படுத்தல், எள்ளல், சபித்தல் ஆகியவற்றை மையமிட்டு அங்கதச்சுவை பயன்படுத்தப்பட்டுள்ளது. சுட்டி ஒருவர் பெயர் கொளாது ஒருமையில் ஒழுக்கச் சிதைவை அங்கதத்தின் வாயிலாகக் கண்டிப்பது ஒட்டுமொத்த

சமுதாயத்திற்கான சீர்திருத்தமாக விளங்குகிறது. இழியுவமை பயன்படுத்தல், இகழ்தல் ஆகிய பொருண்மையில் வரும் அங்கதங்கள் அறிவின்மையையும் தீமையையும் கண்டனம் செய்யும் பாட்டு என்ற சான்சனின் கோட்பாட்டையும் ஒழுக்கச் சிதைவைக் கண்டிக்கும் அங்கதங்கள் சமுதாய மாற்றங்களை உருவாக்கும் ஜூவேனியலின் அங்கதக்கோட்பாட்டையும் பொருந்திநிற்கின்றன. இன்றைய அறிவியல் உலகில் ஊடாடி சமூகம் மற்றும் அரசியல் சார்ந்து விழிப்புணர்வூட்டும் அங்கதத்திற்கு குறுந்தொகையில் விரவிய அங்கதங்கள் வழிகாட்டியாக அமைந்துள்ளன எனினும் மிகையன்று.

## பார்வை நூல்கள்


[1] Charles Aallen and George D. stephens,(1962) satire practice and theory,

[2] Belmont, Calif., Wadsworth Pub. Co, California

[3] Metthew Hodgart,(2010) satire orgins and principles, New Brunswick, N.J. : Transaction Publishers, Rutgers University in New Brunswick, N.J.

[4] தமிழண்ணல், (2012) தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை, செல்லப்பா பதிப்பகம், மதுரை.

[5] இளம்பூரணர்(உ.ஆ) (2001) தொல்காப்பியம், பொருளதிகாரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-18.

[6] சண்முகம்பிள்ளை.மு (1994) குறுந்தொகை : மூலமும் உரையும் பல்வகை ஆய்வுப் பகுதிகளுடன், தமிழ்ப் பல்கலைக்கழகம் : தஞ்சாவூர்

[7] பேரா. வெள்ளைவாரணர், (2016) தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL



## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License